International Refereed Journal of Tamil Studies Research (IRJTSR) E-ISSN: 2582-5313

தமிழ் ஆய்வு ஆராய்ச்சியின் சர்வதேச நடுவர் இதழ் (ஐ.ஆர்.ஜே.டி.எஸ்.ஆர்)

Volume: 04 Issue: 02 April to June 2022 www.irjtsjournal.org

# சங்க இலக்கியத்தில் நாடக வழக்கு

முனைவர் செ.ரவிசங்கர், எம்.ஏ., பிஎச்.டி.,

*உதவிப்பேராசிரியர்*
*ஒப்பிலக்கியத்துறை, தமிழியற்புலம்*
*மதுரை காமராசர் பல்கலைக்கழகம்*
*மதுரை – 625 021.*

**முன்னுரை**

முனைமாட்சி இல்லாவிட்டால் எனை மாட்சியும் இல்லை என்று திருக்குறள் கூறுவது போல, சங்கக் கல்வி பெறா விட்டால் தமிழனுக்கு ஏனையக் கல்வியால் இனப்பெருமையில்லை என்று வ.சு.ப மாணிக்கம் குறிப்பிடுவர். அந்த வகையில் தமிழர்களின் பண்பாடு, வாழ்வியல், சமயம், பொழுதுபோக்கு போன்ற அனைத்துக்கும் பெட்டகமாக இருப்பது சங்கஇலக்கியங்கள் என்றால் மிகையல்ல, எனவே தான் சங்க இலக்கியங்களை தொடக்க கால ஆய்வியல் அணுகுமுறையில் இருந்து இன்றுள்ள நவீன இலக்கியக் கோட்பாடுகள் அனைத்தும் கொண்டு ஆராய முடிகிறது. சங்க இலக்கியத்தினை பல்வேறான துறைகளோடும் ஒப்பிட்டு ஆராய்ச்சி மேற்கொள்ளப்படுகிறது. அந்த அளவில் எல்லா விதமான அணுகுமுறைகளுக்கும் இடங்கொடுக்கின்ற ஒன்றாகத் தமிழ் இலக்கியமான சங்க இலக்கியங்கள் விளங்குகின்றன. அந்த வகையில் சங்க இலக்கியங்களுள் ஒன்றான குறுந்தொகையில் இடம்பெற்றுள்ள காட்சிப் பின்புலங்களை இக்கட்டுரை ஆராய்கிறது.

**சங்க இலக்கியங்களின் சிறப்பு**

சுங்க இலக்கியம் திணையை அடிப்படையாகக் கொண்டுள்ளது. திணைச் செய்யுளின் பாடுபொருள் மனிதமன உணர்ச்சிகள், ஆழ்மனக் குறிப்புகள் ஆகியவற்றுக்குரிய புற உருவ வெளிப்பாடுகளைத் தன்னகத்தே கொண்டுள்ளது. காதல், வீரம், கொடை, சார்ந்த வாழ்க்கை நாடகத்தின் உணர்ச்சி ததும்பும் அப்போதைய நிகழ்ச்சிகளைக் காட்சி ஓவியங்களாகப் படம் பிடித்துவிடத் திணை செய்யுட்கள் முயலுகின்றன. அவை உண்மையான நிகழ்ச்சிகளை விடவும் அவற்றாலேற்படும் உணர்ச்சிகளுக்கும், மனக்குறிப்புகளுக்குமே அழுத்தம் கொடுக்கின்றன. அத்தகைய உணர்ச்சிகளின் அன்றைய சமூகப் பின்புலம், இன்றைக்குள்ளதிலிருந்து முழுவதும் வேறுபட்டது. ஆனால் அவை வரலாறு, சமூகம் என்பவற்றுக்கு முதன்மை அளிப்பதை விட இயற்கை, நிலப் பின்னணி ஆகியவற்றிற்கே முதன்மை அளிக்கின்றன. எனவே இத்திணைப் பாடல்களைப் படிப்பவர்கள், மிகத் தொலைவான பழங்காலத்திற்கும் இக்காலத்திற்கும் இடையேயான மிகப் பெரிய சமூக வரலாற்று இடைவெளியைப் பெரிதும் உணர்வதில்லை. காதல், போர், கொடை குறித்த அடிப்படை உணர்வுகள் காலத்தால் மாற்றப்படுவதில்லையெனவே இந்த அடிப்படை வாழ்க்கைக் கூறுகளைக் குறித்த திணைச் செய்யுள் எல்லாக் காலங்களுக்கும் உரியதாகிறது. என்று சங்க மரபு நூலில் தமிழண்ணல் சங்க இலக்கியங்களின் சிறப்பினை மிகத் தெளிவாகக் கூறியுள்ளார்.

ஒரு இலக்கியம் பல காலங்கள் கடந்தும் நிலைத்து நிற்கிறது எனில் அவற்றில் ஏதோ ஒரு தனிப்பண்பு இருக்கின்றது எனக் கொள்ளலாம். சங்க இலக்கியத்தைப் பொருத்த வரையில் அந்தத் தனிப்பண்பு பொதுமை தான் அதிலும் அகப்பாடல்களில் ‘சுட்டி ஒருவர் பெயர் கொளப் பெறார்’ என்பது மிகப் பெரிய கருத்தியலாக அமைந்துள்ளது. எனவே தான் காலம் கடந்தும் சங்க இலக்கியம் சிறப்புடன் விளங்குகின்றது.

**சங்க இலக்கியத்தில் நாடக வழக்கு**

தொல்காப்பியம் அகத்திணையில் செய்யள் புனைவுக்கான இலக்கணத்தைச் சிறப்பாகவும் செம்மையாகவும் எடுத்துரைக்கின்றது.

“ நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்

பாடல் சான்ற புலனெறி வழக்கினும்

கலியே பரிபாட்டு ஆயிரு பாங்கினும்

உரியதாகும் என்மனார் புலவர்"

என்று அகத்திணையில் நூற்பா 56 ல் தொல்காப்பியர் கூறுவது கவனத்திற்குரியது. அதாவது உலகியல் வழக்கும் நாடக வழக்கும் தமிழ் இலக்கியத்தின் மரபுகளாக இருந்துள்ளன. சங்கச் செய்யுள்களில் இரண்டு வழக்குகளும் ஒருங்கே இடம்பெற்றுள்ளன என்பதை அறியமுடிகிறது. 'உலகியல் வழக்கு என்பது திணைச் செய்யுள்களின் தகுதியுடைய பாடுபொருள்களாக மக்களின் வாழ்க்கையையும், நிகழ்ச்சிகளையும் கொள்வதாகும். நாடக வழக்கு என்பது செய்யுள்களின் அடிப்படை பாடுபொருள்களைத் தீட்டிக் காட்டும் முறையேயாகும்' என்பர் தமிழண்ணல்,

மேலும் சங்க இலக்கியம் என்பது அதன் ஆழமான மானுட உட்பொருளையும் மனித வாழ்க்கையின் சரியான பிரதிபலிப்பையும் கொண்டிருப்பது குறிக்கத் தக்கதாகும். திணைப்பாடல்களில் இயற்கையின் பல விளக்கங்கள் உள. ஆனால் இயையெல்லாம் துணைக் கருவியேயாகும் இவை செய்யுளின் உயிராக அமைந்த மனித வாழ்வியலின் பின்புலமேயாகும்.

அகப்பாடல்களில் செய்யுள் ஒரு கற்பனை மேடையாக்கப் பெறுகின்றது. இடம், பருவம், காலம், மாவடை, மரவடை ஆகியன பின்புலம் சமைக்கின்றன. மனித வாழ்க்கை நாடகமாக்கப்படுகிறது என்பர் தனிநாயகம் அடிகளார் இது பொருத்தமாகவே உள்ளது.

நாடக வழக்கம்

சங்க அகச் செய்யுள்கள் நாடக வழக்கம் பெற்றிருந்தன என்பதைச் சங்கப் பாடல் கொண்டே அறியலாம்.

"ஆடமைக் குயின்ற அவிர்துளை மருங்கில்

கோடை யவ்வளி குழலிசை யாகப்

பாடின் அருவிப் பனிநீர் இன்னிசைத்

தோடமை முழவின் துதை குரலாகக்

கணக்கலை இழுக்கும் கடுங்குரல் தூம்பொடு

மலைப்பூஞ் சாரல் வண்டு யாழாக

இன்பல் இமிழிசை கேட்டுக் கலி சிறந்து

மந்தி நல்லவை மருள்வன நோக்கக்

கழைவளர் அடுக்கத் தியிலி யாடுமயில்

விழவுக்கள விறலியில் தோன்றும் நாடன்"1 இப்பாடல் சங்கப் புலவர்களுக்கு எல்லாம் இயற்கை ஆடரங்கமைக்க உறுதுணை யாயின எனலாம். அதாவது கபிலர் ஒரு நாள் கண்டு களித்த மலைக்காட்சியை செய்யுளாக மாற்றியுள்ளார். மலையிலே ஒரு பக்கம் வண்டு துளைத்த மூங்கிலின் துளை வழியே காற்று வீசியது. அப்பொழுது இனிய இசையொலி எழுந்தது. பிறிதொரு பக்கம் கல்லை உருட்டிக் கொண்டு ஓடிவரும் அருவி ஓசை கேட்டது. துள்ளித்திரியும் புள்ளி மான்கள் ஓர்பால் குரல் கொடுக்கின்றன. மலைப் பூஞ்சாரலில் வண்டுகள் இமிர்க்கின்றன. மயில்கள் ஒரு பக்கம் தோகை விரித்தாடின. மந்திகள் இவற்றைப் பார்த்துக் கொண்டிருக்கின்றன. இது கபிலரின் பார்வையில், கற்பனையில் ஆடரங்காகத் தோன்றியதால் அதனை மேற்கண்ட பாடலாக அமைக்கிறார். சங்க காலத்தில் நாடகம் என்பது நடிக்கப்பட்டு இருக்கின்றது எனவே தான் புலவர்கள் இது போன்ற பாடலைப் புனைந்துள்ளனர். அது தவிர அனைத்து அகப்பாடல்களிலும் ஏதாவதொரு இயற்கையைக் காட்சிப் பின்புலமாக்கிக் கொண்டு செய்யுள் இயற்றியுள்ளனர்.

குறுந்தொகையில் காட்சிப் பின்புலம்

குறுந்தொகைப் பாடல்கள் மிகவும் அதிகமான மேற்கோள்கள் காட்டப்பட்டப் பாடல்கள் ஆகும். 'குறுந்தொகை நாலடிச் சிற்றெல்லையும் எட்டடிப் பேரெல்லையும் உடையது. அடியளவாற் குறுகியதன்றிப் பொருளளவாற் பெரியதென்றே கூறலாம்' என்பர் பண்டிதமணி கதிரேசச் செட்டியர்.

மேலும் 'சுருங்கச் சொன்னால் ஒவ்வொரு குறுந்தொகைப்பாடலும் ஒரு வாமனாவதாரம் எனலாம்' என்பர் இரா.தண்டாயுதம். இவ்வளவு சிறப்பு வாய்ந்த குறுந்தொகையில் இடம்பெற்றுள்ள பாடல்கள் இயற்கையை மையமாக வைத்துக் காட்சிப் படுத்தும் விதம் மிகவும் போற்றத்தக்கதாக உள்ளது. அந்த வகையில் காட்சியை வெளிப்படுத்த கூற்றுக்களைப் புலவர்கள் பயன்படுத்தியுள்ளனர். அவர்களில் பெரும்பாலும் மூன்று பேரின் கூற்று வழியில் தான் காட்சி பின்புலமாக அமைந்துள்ளன. அவை,

1. துலைவி கூற்று வழி காட்சி
2. தோழி கூற்று வழி காட்சி
3. துலைவன் கூற்று வழி காட்சி

இவர்கள் தான் குறுந்தொகையில் அதிகமாகப் பேசுபவர்களாக உள்ளனர்.

**தலைவி கூற்று வழி காட்சி**

சங்க இலக்கியத்தில் தலைவியின் கூற்றில் பெரும்பாலும் வருத்தமே மேலோங்கியிருக்கும் காரணம் தலைவன் தலைவியை தனியே விட்டுப் பிரிந்து போன பின்பு அவள் தனிமையில் வருத்தமடைவாள். ஆதனால் தான் தலைவியின் கூற்றில் அமைந்த பாடல்கள் பெரும்பாலும் வருத்தமாகவே உள்ளன. அக்கூற்றுப் பாடல் ஏதாவதொரு காட்சியை மையமாக வைத்துத் தான் அமையும் அத்தன்மையில் குறுந்தொகையில் 'தாமோதரன்' என்னும் சங்கப் புலவர் இயற்றிய பாடலில் இடம்பெற்றுள்ள காட்சிப் பின்புலத்தைக் காணலாம்.

" ஞாயிறு பட்ட அகல்வாய் வானத்து

அளிய தாமே கொடுஞ்சிறைப் பறவை

இறையுற ஓங்கிய நெறி அயல் மராஅத்த

பிள்ளை உள்வாய்ச் செரீஇய

இரை கொண்டமை யின் விரையுமால் செலவே"2

இப்பாடல் தலைவியின் ஏக்கத்தை வெளிப்படுத்தும் பாடல்.

1. தலைவனைப் பிரிந்து வாடும் தலைவி காமநோய் மிகுதியால் அதனை ஆற்ற முடியாதவள் ஆகிறாள்.
2. இதற்கு உவமையாக கூட்டில் பசியோடு இருக்கும் இளங்குஞ்சுகளுக்காகத் தாய்ப்பறவை இரையைத் தம் அலகுகளால் கொத்தி வானத்தில் வேகமாகப் பறந்து செல்கிறது.
3. துலைவி அந்நிகழ்வைப் பார்த்து ஏங்குகிறாள்.

இது பாடலில் அமைந்துள்ள கருத்து, ஆனால் இதன் பின் அமைந்துள்ள காட்சி தான் நாடக வழக்கைக் காட்டுகிறது. அதாவது மயக்கும் மாலைப் பொழுது கதிரவன் மேற்குத் திசையில் மறைத்து விட்டான். வானம் அகன்ற இடம் உடையதாய்த் தோன்றுகிறது. இவ்வேளையில் வளைந்த சிறகுகளை உடைய பறவைகள் சில வேகமாகப் பறந்து செல்கின்றன. அவை ஏன் அவ்வாறு விரைந்து செல்கின்றன? எங்கே செல்கின்றன? யாருக்காக இத்துணை விரைவு காட்டுகின்றன? அப்படி விரைந்து பறந்து சென்றது என்ன தான் சாதிக்கப் போகின்றன? கொஞ்சம் கற்பனை செய்து பார்ப்போமே?

போகும் வழியினை அடுத்தாற்போல் ஓங்கி வளர்ந்துள்ள மராமத்துக் கிளைகளில் அந்தப் பறவைகள் கூடு கட்டிக் குடும்பமாக வாழ்ந்து வருகின்றன. கூட்டில் தாமே பறந்து உணவு தேட முடியாத இளங்குஞ்சுகள் தாய்ப்பறவைகளின் வரவை எதிர்பார்த்து பசியோடு காத்திருக்கின்றன. அந்தக் குஞ்சுகளின் பசியைத் தீர்ப்பதற்காகத் தேடிப் பெற்ற இரையைத் தம் வாயில் வைத்துக் கொண்டு தாய்ப்பறவைகள் அகன்ற வானத்தில் வேகமாகப் பறந்து

செல்கின்றன. அந்தப் பறவைகளிடம் தான் எத்துனை அன்பு! எத்துணைப் பாசம்! பறவைகளின் குடும்ப வாழ்வில் இவ்வளவு சிறந்த தாய்மையுணர்வா! என்று பேராசிரியர் இரா.மோகன் குறுந்தொைப் பாடலுக்கு ஒரு பின்புலக் காட்சியைத் தத்ரூபமாகக் கொடுத்துள்ளார்.3இந்தக் காட்சியின் பின்புலத்தில் தான் தலைவியின் மன உணர்வைப் புரிந்து கொள்ள முடியும்.

இப்போது குறுந்தொகைக்குச் சான்றோரான தாமோதரனின் பாடல் அப்படியே மனத்தைக் கவர்ந்து கொள்ளும். இது தான் நாடக வழக்கு அதாவது முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் ஆகிய மூன்றும் இணைந்து திறனுடன் ஆக்கப்பெற்ற பாடல்கள் சிறந்தவை. இவ்வாறு சுவைபட வருவன எல்லாம் ஓரிடத்து வந்தனவாகத் தொகுத்துக் கூறுவதை நாடக வழக்கு என்று தொல்காப்பியர் கூறுவார். இவ்வாறு கூறுவதை நாடக வழக்கு என்று தொல்காப்பியர் கூறுவார். இவ்வாறு கூறுவதைக் கவிதைக்குரிய வேலி என்று நினைத்தல் தவறு இந்த வரையறைகள் கவிதைகளின் கவினை மிகுதிப்படுத்திக் காட்டும் கூறுகளாகும் என்பர் ந.சுப்புரெட்டியர். இந்த மிகுதிக் கூறுகள் தான் பாடலின் காட்சிப் பின்புலமாக அமைகின்றன.

மேலும் தலைவி பிரிவுடை ஆற்றாமை கண்டு வருவார் எனச் சொல்லிய தோழிக்குத் தலைவி உரைத்தலும் நல்ல காட்சிப் பின்புலமாக அமைகின்றது. மேலும் தலைவி பிரிவுடை ஆற்றாமை கண்டு வருவார் எனச் சொல்லிய தோழிக்குத் தலைவி உரைத்தலும் நல்ல காட்சிப் பின்புலமாக அமைகின்றது.

“ உள்ளார் கொல்லே - தோழி - கிள்ளை

வளைவாய்க் கொண்ட வேப்ப ஒண்பழம்

புது நாண் நுழைப்பான் நுதஜமான் வாள் உகிர்ப்

பொலங்கல ஒரு காசு ஏய்க்கும்

நிலம்கரி கள்ளி அம் காடு இறந்தோரே?

இப்பாடல் அள்ளுர் நன்முல்லையார் பாடியது. இங்கு காலம் பாடலின் காட்சிப் பின்புலமாக அமைக்கப்பட்டுள்ளது. அதாவது தலைவன் தலைவியைப் பிரிந்து செல்லும் போது கார் காலத்தில் வந்து விடுவேண் என்று கூறிச் செல்கிறான். ஆனால் கார் காலம் வந்த பிறகும் அவன் வரவில்லை, தற்பொழுது தலைவி தனிமையில் துயரம் அடைகிறாள். அதனை ஒரு காட்சியின் மூலம் நன்முல்லையார் கவிதையாக்கியுள்ளார்.

இப்பாடலுக்குள் தலைவியின் மனநிலையை விளக்கும் விதமாக அமைந்துள்ள கிளி தன்னுடைய வளைந்த அலகிடத்தே பற்றிக் கொண்டுள்ள, வேம்பினது ஒள்ளிய பழம் புதிய நூலை நுழைக்கும் பொருட்டு, மகளிர் தங்கள் விரல் நுனிகளில் அழகாக விளங்கும் கூர்மையான நகங்களுக்கிடையே வைக்கப்பட்டுள்ள பொற்காசு போலக் காட்சியளிக்கும், நிலம் கரிந்துள்ள, கள்ளிச் செடிகள் மிகுந்துள்ள இத்தகைய காட்டினைக் கடந்து சென்ற நம் காதலர், நம்மை நினையாரோ? என்னும் கருத்து இயற்கையைக் காட்சிப்படுத்துகிறது.

**பாடலால் வெளிப்படும் காட்சி**

1. வேம்பும் கள்ளியும் பாலை நிலக் கருப்பொருளாகும்
2. மகளிர் தனது அணிகலன்களில் உள்ள பழைய நூல் அறும் நிலையில் புதுநூல் மாற்றுவது வழக்கம்
3. வேம்பின் ஒண்பூ மலர்ந்து உதிர்வதற்குள், இளவேனில் தொடங்கும் பருவத்தில் வருவதாகத் தெளிவித்துச் சென்றவர் வேம்பின் பழம் தொடங்கிய பின்னரும் வந்திலர் எனத் தலைவி ஆற்றாளாயினாள் என்பதால் வேம்பு குளர் காலத்தில் பழம் தரும் என்னும் காட்சிப் புலப்படுகிறது.
4. கிளியின் வாயில் பற்றிய பழம் அதற்கு அனிமை தருவதாயினும் நமக்கு இனிமை தருமாறில்லை என்று தலைவி புலம்புவதும் பாடலின்பின்புலக் காட்சியால் அறியமுடிகிறது.

இவ்வாறாகக் குறுந்தொகைப்பாடலில் தலைவன் கூற்றுக்களில் பாடலின் பின்புலக் காட்சி நன்கு வெளிப்படுகிறது. இதனைத் தான் நச்சினார்க்கினியர் காதலின் இத்தகைய சித்தரிப்பு நாடக வழக்கு எனப்பெறுவதாகும். இத்தகைய ஓர் அழகிய காட்சியைப் படைத்தளிப்பதன் நோக்கம் படிப்போரை அழகியல் நோக்கில் இன்புறுத்துவதே என அவர் கூறுகின்றார். இன்றைய நாடகம் அல்லது திரைப்படங்களில் இடம்பெறும் அலங்காரமான காட்சி அமைப்புகளை நம் மனதில் கொண்டால் இக்கருத்து நன்கு விளங்கும்.

எடுத்துக்காட்டாக, ஒரு காட்சியில் காதலர் பாட்டுப் பாடி மகிழ்ந்திருப்பார்கள் எனின், பசுமையான சோலைகளும், அருவிகளும், ஆடும் மயில்களும் அக்காட்சியின் பின்னணியில் அமைக்கப்பெறும். இதே போலக் காதலர் பிரிவில் வருந்தும் காட்சியெனின் முட்புதர்களையுடைய வறண்டு நீண்ட நிலமும், அந்நிலத்தில் எலும்புக் கூடுபோல் நிற்கும் உலர்ந்த மரமும் பின்னணியிற் பொருந்துமாறு அமைக்கப்பெறும். 'இயற்கை நிலக் காட்சியும் செய்யுளும் என்ற நூலில் புலவன் தான் புனைய விரும்பும் மனித ஒழுக்கலாறு என்னும் அடிக்கருத்தை உயர்த்திக் காட்டுதற்கும், அதனை இயல்பான நிலைக்குக் கொண்டு வந்து காட்டுதற்கும் தேவைப்படும் பொருந்திய பல இயற்கை நிலக் காட்சிகளுக்கு அவன் விரும்பியாங்கு முன்னுரிமை அளிப்பான் என்று கூறுவதற்கொப்ப இப்புனைவு நிகழும் என்பர் தனிநாயகம் அடிகள்' என்பதாக தமிழண்ணல் தமது சங்க மரபு நூலில் கூறியுள்ளார். அந்த அடிப்படையில் தான் குறுந்தொகையின் தலைவியின் மன வருத்தம் புலவர்களால் காட்சிப் பின்புல அடிப்படையில் புனையப்பட்டுள்ளது.

**தலைவன் கூற்று**

தலைவி இல்லத்தில் வருந்தியிருக்கும் போது அவள் சில காட்சிகளை எடுத்துரைக்கிறார். அது போலவே தலைவனும் தன் நிலையை எடுத்துரைக்கும் விதமாகக் காட்சியமைத்துக் கருத்தை வெளிப்படுத்துகிறான். தலைவன் தனது கருத்தை உரைக்கும் போது நாடகத்தின் பின்பக்கமாகக் உள்ள திரைச்சீலை ஓவியம் போல இயற்கையைப் பின்னணியாகக் கொண்டு கருத்தின் வழிக் காட்சிப்படுத்துகிறான்.

'பெரிய மலையிலிருந்து விழுகின்ற தூய வெண்மையான அருவி நீர் பாறை வெடிப்புகளில் நிரம்பி வழிந்து ஒலிக்கும் பல மலரையுடைய சாரலில் உள்ள சிற்றூரில் வாழும் குறவனுடைய பெரிய தோள்களைக் கொண்ட சிறுமகளின் நீரைப் போன்ற மென்மை தீயை ஒத்த என் வன்மையை அழியச் செய்தது' என்பதைக் கபிலர் செய்யுளாகப் புனைந்துள்ளார்.

“ மால்வரை இழிதரும் தூவெள் அருவி
கல்முகைத் ததும்பும் பல்மலர்ச் சாரற்
சிறுகுடிக் குறவன் பெருந்தோட் குறுமகள்
நீர்ஓ ரன்ன சாயல்
தீஓ ரன்ன என் உரன் அவித் தன்றே” 4 - 95

இப்பாடலில் இயற்கையைக் கண் முன்னால் காட்சிப்படுத்துகிறார். இக்காட்சியினால் வாசகனுக்கு மயலயம் மலை சார்ந்த இடமும் என்னும் நினைவோட்டத்தில் உணர்ந்து கொள்ள முடியும். அதன் பின்பு தான் குறுமகள் ஒருத்தியிடம் தாம் கொண்ட காமம் (காதல்) என்று தலைவன் கூறுவதாக அறிய முடிகிறது. கூற வந்தக் கருத்து மிகவும் சிறிய கருத்து தான். ஆனால் அதற்கு தலைவன் எடுத்துக் கொண்ட பின்புலம் தான் பாடல் முழுவதும் அமைந்துள்ளது.

எனவே தான் சங்க இலக்கியங்களை ஆராய்ந்தவர்கள் திணைச் செய்யுளின் நாடகப் பாங்கு அதன் அடிக்கருத்திலும், கற்பனையிலும் காணப்படுகின்றது என்கின்றனர்.

**மனத்திற்குக் புலப்படுத்துதல்**

சில கருத்துக்களை மனத்திற்குக் காட்சிப்படுத்துவது மிளகாய் உரைக்கும் என்பதைச் சாப்பிட்டுப் பார்த்தால் தான் தெரியும், ஆனால் அவற்றை சொல்லாலே காட்சிப்படுத்துவதும் உண்டு அது போல சங்க காலத் தலைவன் ஒரு பாடலில் தலைவியைப் பற்றிப் பாடலில் கூறும் போது அவளது உடலின் மென்மையைக் காட்சிப்படுத்துவது அருமையாகப் பதிவாகியுள்ளது.

“ கோடல் எதிர்முகைப் பசுவீ முல்லை
நறுஇதழ்க் குவளையோடு இடைப்பட விரைஇ

ஐது தொடை மாண்ட கோதை போல

நளிய நல்லோள் மேனி

முறியினும் வாய்வது முயங்கற்கும் இனிதே" 5 - பாடல் 62

இப்பாடல் இயற்கைப் புணர்ச்சியில் தலைவியைப் பெற்று இன்புற்றது போல, இடந்தலைப்பாட்டின் கண்ணும் அவளைப் பெற்று மகிழ விரும்பிய தலைவன், தன் நெஞ்சிற்கு உரைப்பதாக அமைகிறது. தலைவியின் மேனியழகையும், நறுமணத்தையும் காட்சிப்படுத்துவது பாடலின் பின்புலமாக அமைந்துள்ளது. அந்த வகையில்

காந்தள் மலரையும் தோற்றிய அரும்பிலிருந்து வெளிப்பட்ட செவ்வி மலர்களாகிய முல்லை மலரையும் மணம் பொருந்திய இதழ்களையுடைய குவளை மலர்களோடு இடையிடையே கலந்து வைத்து அழகியதாகத் தொடுத்த மாட்சிமையுடைய மாலையைப் போல நல்மணமுடைய நல்லாளாகிய தலைவியினது மேனியானது தளிரைக் காட்டிலும் மென்மையும் நிறமும் பொருந்தியது. தழுவுவதற்கு இனிமை தருவது, என்று தலைவன் கூறுகிறான். புாடலில் தலைவியிடம் முன்பு அனுபவித்த இன்பத்தைக் காட்சிப்படுத்துகிறான்.

ஒட்டு மொத்தமாகவே அகப்பாடல்கள் உலக வாழ்க்கையில் கண்ட சிறு சிறு பகுதிகளைக் காட்சிப்படுத்தி நாடக வழக்காக மாற்றியுள்ளது. 'ஒரு பாவலன் ஓரிடத்துக் காதலர் இருவர் கள்ள உறவு மேற்கொண்டிருத்தலைக் கண்டிருப்பின், பிறிதொரு இடத்தில் உடன் போக்குச் செல்லும் இருவரைச் சந்தித்திருப்பின் மற்றுமோர் இடத்தில், பொருள்வயின் பிரிந்த தலைவனை எண்ணித் தனிமையில் அவியும் பெண் ஒருத்தியைப் பார்த்திருப்பான், இவையெல்லாம் பாவலன் வெவ்வேறு இடங்களில், வெவ்வேறு குடும்பங்களில் நேரில் கண்டறிந்த உண்மைகள் உலக வழக்கங்கள் தான் கண்டறிந்தவற்றிற்குப் பாட்டு உருவம் தருகிறபொழுது, திணைப் புனத்தில் காதலர் இருவர், அவர் ஒருவரை ஒருவர் கண்டனர்.தம்முள் உறவு கொண்டனர், திணைப்புனப் பணி முடிந்தது, தலைவி இற்செறிக்கப்பட்டாள் அவளைக் காணத் தலைவன் துடித்தான். அவன் விரும்பியவாறு விரும்பிய போது சந்திக்க முடியவில்லை. இருவரும் எங்காவது போய்விட முடிவுசெய்தனர். புறப்பட்டுப் போயினர். எங்கோ ஓர் ஊரில் இருந்து இல்லறம் நிகழ்த்தினர். இருந்த பொருள், செலவு அழிந்த நிலையில் புதுப்பொருள் தேடத் தலைவன் புறப்பட்டனன். தலைவி பிரிதலை எண்ணி வருந்தினள், அழுதனள், தலைவன் பயணத்தை நிறுத்தினான், அவளை ஆற்று வித்தனன், தோற்றுவித்தனன், பின்னர் புறப்பட்டுப் போயினன், கார் காலத்தில் வருவதாகக் கூறினன். அவன் வரைவ எதிர்நோக்கி அவள் காத்துக் கிடந்தனள்.

எனத் துண்டுத் துண்டுப் பார்வைகளை ஓரிடத்தில் திரட்டித் தருவது என்பதே நாடக வழக்கு என்பர் க.ப. அறவாணன். இந்த நாடக வழக்கு அகப்பாடல்களில் காண முடிகின்றது. ஆதற்குக் காரணமாக பாடல்களில் அமைந்துள்ள காட்சிப் பின்புலம் அமைகிறது. ஆந்த வகையில் தலைவன் கூற்றில் காட்சிப்படுத்துதல் என்பது நாடகப் பாணியில் அமைந்துள்ளது.

**தோழி கூற்றில் காட்சி**

சங்க அக இலக்கியத்தைப் பொறுத்த வரையில் தோழி தான் முக்கியமானப் பாத்திரமாக அமைந்துள்ளது. தோழி தலைவன் தலைவியின் வாழ்க்கைக்குப் பாலம் போன்றவள். 'தோழி செவிலிக்கு மகளாய், நன்மையும் தீமையும் ஆய்தலுடன் தலைமகளுக்கு உசாத்துணையாய் அவளது வருத்தம் தீர்தற்குரிய அன்பு பொருந்திய துணைவியாம் எனச் செறித்துக் கூறுகின்றது அபிதான சிந்தாமணி, அவளது சொல்லும் செயலும் அறிவு வாய்ந்தவை, நாடக அமைப்புடையவை, தலைமைப் பாத்திரங்கள் காதல் உணர்ச்சியில் தவிக்கும் போதும், வாழ்க்கைப் போராட்டத்தில் ஈடுபடும் போதும் உலகியல் உண்மைகளோடு வாழ்க்கை அனுபவங்களை இணைத்துச் சமநிலையைக் காண முற்படல் ஒரு வகைக் கலைத் திறனாகும். ஆக்கலைத்திறனை நாடக நலத்துடன் கையாளும் கலைச்செல்வியே தோழி என்னும் நாடக கூற்று என்று6 கூறுகிறார்.

பொதுவாக தமிழ் சங்கஇலக்கியப் பாடலை ஆராய்ச்சி செய்தவர்கள் அவை நாடகத் தன்மை பொருந்தியது என்பதை வெளிப்படுத்துகின்றனர். அந்த வகையில் தோழியும் தமது கூற்றில் காட்சியமைப்பை அமைத்துக் கருத்தை வெளிப்படுத்துகிறார். துலைவி வருத்தமாக இருக்கிறாள் அதற்குக் காரணம் தலைவன் ஒருவனோடு கொண்ட நட்பே என்பதனை வெளிப்படுத்த தோழி பெரிய காட்சியமைப்பைக் கொண்டு கருத்தை வெளிப்படுத்துகிறார். இவ்வாறாக சங்க இலக்கியத்தில் நாடக வழக்கு இடம்பெற்றுள்ளது

**அடிக்குறிப்பு**

[1] அகநானூறு – 82

[2] பாடல் - 92

[3] இரா மோகன் சங்க இலக்கிய மாண்பு. ப.44)

[4] குறுந்தொகை 95

[5] குறுந்தொகை 62

[6] ஈ.கோ.பாஸ்கரதாஸ் அகப்பொருள் பாடல்களில் தோழி. ப.3